**செ.வெ. எண்:142** **நாள்: 23–02–2012**

# பத்திரிகைச் செய்தி

தமிழகத்தின் தொன்மையான தமிழ் இலக்கியங்களை மக்களிடையே கொண்டு செல்லும் வண்ணம், தமிழ் இலக்கியங்களை மையமாகக் கொண்டு, கலை நிகழ்ச்சிகளை அரசு ஆணையிட்டுள்ளவாறு, தமிழகத்தில், திருச்சிராப்பள்ளி, மதுரை, தஞ்சாவூர், விருதுநகர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், கன்னியாகுமரி, திருவள்ளூர், வேலூர் ஆகிய பத்து மாவட்டங்களில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இவ்விழா, தமிழ்நாடு கிராமியக் கலைகள் வளர்ச்சி மைய ஒருங்கிணைப்புடன் நடைபெறவுள்ளது.

முதற்கட்டமாக இவ்விழா 24.02.2012 தேதியில் திருச்சிராப்பள்ளி, ஸ்ரீரங்கத்திலும், 25.02.2012 தேதியில் தஞ்சாவூரிலும், 26.02.2012 தேதியில் நாகப்பட்டினத்திலும் நடைபெறவுள்ளது.

திருச்சிராப்பள்ளி, **ஸ்ரீரங்கம், மேலச் சித்திரை வீதி – தெற்குச் சித்திரை வீதி சந்திப்பு திறந்த வெளி அரங்கில்** நடைபெறும் இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி **ஜெயஸ்ரீ முரளிதரன்**, இ.ஆ.ப. தலைமையேற்கவும், சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு.**வி.கு.ஜெயக்கொடி**, இ.ஆ.ப. மற்றும் தமிழ்நாடு கிராமியக் கலைகள் வளர்ச்சி மையத் தலைவர் (ம) முதன்மைச் செயலாளர் – டான்சி தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.**கா.அலாவுதீன்**, இ.ஆ.ப. ஆகியோர் சிறப்புரையாற்றவும், வணக்கத்திற்குரிய மாநகராட்சி மேயர் திருமதி **அ. ஜெயா,** திரு.**ப.குமார்**, எம்.பி. திரு.**மு.பரஞ்ஜோதி**, எம்.எல்.ஏ., திரு.**ஆர்.மனோகரன்**, எம்.எல்.ஏ. ஆகியோர் வாழ்த்துரை வழங்கவும், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு.**என்.ஆர்.சிவபதி** அவர்கள் கலைவிழாவினைத் துவக்கிவைத்து விழாப் பேருரையாற்றவும் அன்புடன் இசைந்துள்ளார்கள்.

விழாவில் தேனிசைத் தென்றல் திரு.**தேவா** அவர்களின் மெல்லிசை நிகழ்ச்சியும், திரைப்பட நடிகர் திரு.**குண்டு கல்யாணம்** குழுவினரின் பல்சுவை நிகழ்ச்சியும், திருமதி.**ரேவதி முத்துசாமி,** திருமதி **ராதிகா சுரஜித்** ஆகிய குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளது.

விழா ஏற்பாடுகளை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத் தலைவர் திரு.**தேவா**, உறுப்பினர்–செயலாளர் **குமாரி சச்சு** ஆகியோர் செய்து வருகின்றார்கள்.

**<u>தமிழ் இலக்கியக் கலைவிழா நடை பெறும் இடங்கள்</u>**

| வ.எண். | கலை நிகழ்ச்சிநடை பெறும் இடம் | நாள் |
|---|---|---|
| 1 | திருச்சி (ஸ்ரீரங்கம்) | 24.02.2012 |
| 2 | தஞ்சாவூர் | 25.02.2012 |
| 3 | நாகப்பட்டினம் | 26.02.2012 |
| 4 | விருதுநகர் | 02.03.2012 |
| 5 | கன்னியாகுமரி | 03.03.2012 |
| 6 | மதுரை | 04.03.2012 |
| 7 | திருவண்ணாமலை | 10.03.2012 |
| 8 | வேலூர் | 11.03.2012 |
| 9 | காஞ்சிபுரம் | 18.03.2012 |
| 10 | திருவள்ளூர் | 25.03.2012 |

**(பி.எஸ்.சச்சு)**
உறுப்பினர்–செயலாளர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**